**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 854/2023

Prosecution PW 4

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு.விவேகானந்தன் |
| Father's Name | : | ரவிக்குமார் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 03.03.2026.

**2, 4 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம் மூலனூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 24.9.2021ம் தேதி திருச்சி குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது கரூர் குடிமைப்பொருள் வழங்கள் உதவி ஆய்வாளராக

இருந்த சத்யபிரியா என்பவர் கடந்த 24.9.2021ம் தேதி காலை 5.30 மணியளவில் கரூர் வாங்கல்-மோகனூர் பாலம் ரோடு வாங்கல் செக்போஸ்ட் அருகே வாகனதணிக்கையின்போது TN 28 M 8011 என்ற அசோக் லேலண்டு டாரஸ் லாரியை சோதனை செய்தபோது அதனை ஓட்டி வந்த டிரைவர் சேகர் த/பெ.காளியண்ணன், பரமத்தி வேலூர், நாமக்கல் என்பவர் மேற்படி லாரியில் சுமார் 50 கிலோ எடையுள்ள 457 கிலோ மூட்டைகளில் உடைக்கப்பட்ட குருணை பொதுவிநியோகத்திட்ட அரிசியும் சுமார் 50 கிலோ எடையுள்ள 27 மூட்டைகளில் சுமார் 1050 கிலோ பொதுவிநியோகத்திட்ட அரிசியும் இருந்த காரணத்தினால் மேற்படி சேகர் என்பவரை விசாரிக்க ஷை அரிசி மதுரை ஜெய்ஹிந்தபுரம் ஓம்சந்த் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் ராஜேஸ்குமார் என்ற குமார் என்பவரிடமிருந்து வாங்கி வந்ததாகவும் மேற்படி அரிசி கொண்டு வந்ததற்கு எந்தவித அனுமதியும் இல்லை என்பதால் கைது செய்யப்பட்டு சாட்சிகள் ராமச்சந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர், த.கா. 664 காந்திசெல்வம் ஆகியோர் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்தபோது எதிரி சேகர் என்பவர் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

ஷை ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஷை லாரி மற்றும் உடைத்த குருணை அரிசி 457 மூட்டைகள் மற்றும் உடைக்கப்படாத பொதுவிநியோகத்திட்ட அரிசி 27 மூட்டைகள் மற்றும் மற்றும் எதிரி சேகர் என்பவரிடமிருந்து டேக்ஸ் இன்வாய்ஸ் ஆகியவற்றை கைப்பற்றி தர பரிசோதனைக்காக மாதிரிக்கு எடுத்தும், ஷை லாரி மற்றும் அரிசி மூட்டைகளை மகசரில் கைப்பற்றியும், எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் கரூர் CSCID குற்ற எண்.95/2021 u/s.6(4)TNSC(RDCS) 1982 r/w 7(1)(a) (ii) of EC Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தும் முதல் தகவல் அறிக்கை அசலை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கரூர் அவர்களுக்கு அனுப்பியும், ஒருநகலை

புலன்விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பை நான் பெற்றுக்கொண்டு சாட்சிகள் ராமச்சந்திரன், காந்திசெல்வன், வசந்த் ஆகியோரை விசாரணை செய்தும், வாக்குமூலம் பதிவு செய்தும், 1ம் எதிரி சேகர் என்பவர் அடையாளம் காட்டிய ராஜேஸ்கண்ணா என்பவரை அன்றையதினமே காலை 11.30 மணிக்கு வெங்கக்கல்பட்டி பஸ்நிறுத்தம் அருகே கைது காரணம் கூறி கைது செய்தும், பின் கரூர் CSCID வந்து விசாரணை முடித்து எதிரிகள் சேகர் மற்றும் ராஜேஷ்கண்ணா ஆகியோரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். உதவி ஆய்வாளர் கைப்பற்றிய அரிசி மாதிரியை பகுப்பாய்வுக்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், கரூருக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட அரிசிக்கு தரச்சான்றிதழ் பெற்றும், ஷை அரிசியையும், கடத்த பயன்படுத்தி வந்த ஷை லாரியையும் 6A ன்படி கரூர் மாவட்ட வருவாய் அலுவலத்திற்கு பரிந்துரை செய்ய வேண்டி அறிக்கை அனுப்பினேன். பின்னர் வழக்கில் சம்பந்தப்பட்ட லாரியின் உரிமையாளர் தினேஷ் மற்றும் நாமக்கல் பெரியபட்டி ரோடு முத்து பவுல்டரி ஏஜென்ஸி உரிமையாளர் தியாகராஜன் ஆகியோர்களை மாண்புமிகு கரூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றது தெரிய வந்தது. இவ்வழக்கில் மேற்கொண்டு உதவி ஆய்வாளர் திருமதி சத்யபிரியா, தரச்சான்றிதழ் வழங்கிய முகமதுஅசீம், துணை மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிகள் சேகர், ராஜேஷ்கண்ணா, தினேஷ், தியாகராஜன் ஆகியோர் மீது 6(4)TNSC(RDCS) 1982 r/w 7(1)(a) (ii) of EC Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை (2, 4 எதிரிகள் தரப்பில்)</u>**

லாரி முழுவதும் சரக்கு இருந்ததா குறைவாக இருந்ததா என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் லாரி முழுவதும் இருந்தது. பறிமுதல் செய்யப்பட்டதாக சொல்லப்படும் மூட்டைகளை பிரித்து பார்த்தேனா என்றால் பிரித்து பார்த்தேன். 457 மூட்டைகளையும் உதவி ஆய்வாளர் பறிமுதல்

செய்துள்ளார். அவைகளை கரூர் நுகர்பொருள் வாணிப கழகத்தில் ஒப்படைத்துள்ளார், அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஒப்படைக்கப்பட்டுள்ளது. நுகர்பொருள் வாணிபகழக கணினி ரசீதில் 25.9.2021 என குறிப்பிடப்பட்டுள்ளது, அதன்பின் சுழிக்கப்பட்டு 24.09.2021 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அலுவலர் மேற்குறிப்பு எழுதியுள்ளார். தணிக்கை ரசீதில் 25.9.2021, 11.21 AM என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சம்பவ இடத்தில் கள விசாரணை நான் செய்யவில்லை, உதவி ஆய்வாளர் செய்தார். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். யார் பதிவு செய்தார்கள் என்று நான் என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளரிடம் விசாரித்து தெரிந்து கொண்டேன். உதவி ஆய்வாளர்தான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாக என் விசாரணையில் தெரிந்து கொண்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் 2ம் பக்கத்தில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரின்படி 1/2 கிலோ மாதிரியை பரிசோதனைக்காக அனுப்பியுள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள தரசான்றிதழில் 6 பாக்கெட்டுகளில் உள்ள அரிசியை தரசான்றிதழ் செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ரேசன் அரிசியை நுகர்பொருள் வாணிபகழகத்தால் ஒவ்வொரு ரேசன் கடைக்கும் தேவையான குறிப்பிட்ட அளவுகளில் அனுப்பப்படும் என்றால் சரிதான். நுகர்பொருள் வாணிபகழகத்தால் அனுப்பப்பட்ட அரிசி ரேசன் கடைக்கு வரவில்லை என்றோ பொதுமக்களுக்கு கிடைக்கவில்லை என்றோ புகார் ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரிசி எந்த நுகர்பொருள் வாணிப கிடங்கிலிருந்தோ வந்தது எந்த ரேசன் கடையில் இருந்தோ பெறப்பட்டது என்று நான் விசாரணை எதுவும் செய்யவில்லை

என்றால் சரிதான். மதுரை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் ரேசன் அரிசி குறைவாகவோ அல்லது அதிகமாகவோ கடத்தப்பட்டதாக புகார் எதுவும் வரவில்லை என்றால் சரிதான்.

ரேசன் கடைகளில் ரேசன் அரிசி வழங்கப்படுவதற்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பொருள் வழங்காமல் வழங்கப்பட்டதாக எந்த ரேசன் அட்டைதாரருக்கும் குறுஞ்செய்தி வந்ததாக புகார் எதுவும் வரப்பெற்றதா என்றால் இல்லை. நான் எதிரிகளிடமிருந்து எதுவும் கைப்பற்றவில்லை என்றும் அசிரியை கைப்பற்றியதற்கான எந்தவித ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணம் மற்றும் சாட்சியம் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்ட Tax Invoice நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அது வழக்கிற்கு விரோதமானது என்பதால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியை சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. புள்ளவிபரக் கணக்கிற்காக போடப்பட்ட பொய்வழக்கு என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**